# பகுதி—I

## 1. சட்டத்தொழில் மற்றும் அதன் பொறுப்புகள்

**(LEGAL PROFESSION AND ITS RESPONSIBILITIES)**

**(மிகவும் முக்கியம்)**

**பாடச்சுருக்கம்: (SYNOPSIS)**

*அ. முன்னுரை*

ஆ. வழக்குரைஞர்களின் பொது பொறுப்புகள்

இ. வழக்குரைஞர்களின் தற்போதைய தகுதி நிலை

ஈ. நடத்தைக்கேட்டிற்காக வழக்குரைஞர்களுக்கு தண்டனை

### அ. முன்னுரை: (INTRODUCTION)

இந்தியாவில் 7,00,000/-ற்கு மேற்பட்ட வழக்குரைஞர்கள் உள்ளனர். இதில் பெரும்பாலானோர் இந்திய நீதிமன்றங்களில் தொழில் நடத்துகின்றனர். இந்திய சட்டத் தொழில் சிறப்பு மிக்க தொழிலாகக் கருதப்படுகிறது. நீதிமன்றத்திலும் வெளியிலும் வழக்கறிஞர்களின் நடத்தை தொடர்பான ஒழுங்குமுறை விதிகள், தொழிலின் கண்ணியத்தைக் காப்பாற்றத் தேவையானவை என நியாயப்படுத்தப்படுகின்றன.

சட்டத்தொழில் இந்நாட்டிற்கு பல்வேறு அறிவாளிகளைத் தந்துள்ளது மற்றும் இந்தநாட்டின் முன்னேற்றத்தில் இத்தொழிலுக்கு இன்றியமையாத பங்கு உண்டு. ஸ்ரீநாத் எதிர் இந்திய யூனியன் (AIR 1996 Mad 427) வழக்கில் சட்டப்பணி என்பது நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986—ன் கீழ் ஒரு பணியாகும் என்று உச்சநீதிமன்றம் கூறியது. எனவே சட்டப்பணியில் உள்ள பணிக்குறைபாடு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 ன் பிரிவு 3—ன் கீழ் பணிக்குறைபாடு என்று கூறப்படுகிறது. இவ்வாறு வழக்கறிஞர்களுக்கெதிரான



நுகர்வோர் கோரிக்கைகளை கையாளுவதற்கு நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்திற்கு அதிகார வரம்பு உண்டு.

சட்டத்தொழில் மதிப்புமிக்கது. எனவே அதன் உறுப்பினர்களான வழக்கறிஞர்கள் நேர்மையான மற்றும் சரியான தார்மீக வழியில் செயல்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

நீதிபதிகளைப் போல வழக்குரைஞர்களும் நீதிமன்றத்தின் அதிகாரிகள் ஆவார்கள். எனவே அவர்கள் தங்கள் பதவியை நல்ல நடத்தையுடன் கையாள வேண்டும். நல்ல நடத்தையானது நீதி நிர்வாகத்திற்குத் தேவையான தூய்மையான மற்றும் மாசற்ற உயர்ந்த ஒழுக்கயியல் தர நிலைகளால் வரையறுக்கப்படுகிறது மற்றும் அளக்கப்படுகிறது.

அத்தகைய ஒழுக்கயியல் தரநிலை எழுத்து வடிவில் இருக்கப்படவேண்டும். அதன்படி செயல்படத் தவறும் வழக்குரைஞர் எவரும் வழக்குரைஞராக செயல்படவோ அல்லது வழக்குரைஞர் கழகத்தின் உறுப்பினராகவோ இருக்க அனுமதிக்கக்கூடாது.

வழக்குரைஞர்களின் நடத்தை, வழக்குரைஞர்கள் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளோடு தொழில் நுட்ப ஒழுக்கயியலின் பொது விதிகள் முலம் முறைப்படுத்தப்படுகிறது. இந்த விதிகளிலிருந்து மாறுபடுதல் கடுமையாக தண்டிக்கப்படவேண்டும்.

தொழில் நுட்ப ஒழுக்கயியல் என்பது தொழில் புரியும் வழக்குரைஞர் தன்னிடம், அவரது கட்சிகாரரிடம் எதிர் வழக்குரைஞரிடத்தில், மற்றும் நீதிமன்றத்தில் சட்டத்தில் அவரது நடத்தையை முறைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத நடத்தை விதித் தொகுப்பு என வரையறுக்கப்படலாம்.

சாதாரணமாக கூறினால், சட்டத்தொழில் ஒழுக்கயியல் என்பது ஒரு வழக்குரைஞர் சங்கத்தின் உறுப்பினர்களின் தொழில்முறை நடத்தையை தீர்மானிப்பதற்கான நடைமுறை மற்றும் விதிகளின் கூட்டுரு எனப்படும்.

நபர் ஒருவர் வழக்குரைஞராகும் பொழுது பொதுவாக மனிதர்களுடன் அவருக்குள்ள உறவு சட்டத்தின் பொது விதிகளால் ஆளுமை செய்யப்படுகிறது. ஆனால் ஒரு வழக்குரைஞராக அவரது நடத்தை வழக்குரைஞர் சங்கத்தின் தொழில் நுட்ப ஒழுக்கயியல் சிறப்பு விதிகளால் ஆளுமை செய்யப்படுகிறது.

இவ்வாறு வழக்குரைஞர்கள் சட்டம், வழக்குரைஞர்களுக்கான தொழில்நுட்ப ஒழுக்கயியலை தொகுத்திருந்தாலும் கூட வழக்குரைஞர்களின் தொழில்முறை வாழ்வின் உறவுகள் அனைத்தையும் முறைப்படுத்துவதற்கு அனைத்து சட்ட ஒழுக்கயியல் மற்றும் விதிகளை வடிவமைப்பது இயலாத ஒன்றாகும்.

## ஆ. வழக்குரைஞர்களின் பொது பொறுப்புகள்:
**(GENERAL RESPONSIBILITIES OF ADVOCATES)**

பின்வருபவை வழக்குரைஞர் ஒருவரின் பொறுப்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்ட விதிகளாகும்:

1. வழக்குரைஞர் ஒருவர் தனது தொழிலுக்கு பின்வரும் சில கடமைகள் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்—தொழில்முறை மதிப்பு, நீதிமன்றம் சகவழக்கறிஞர்கள் கட்சிக்காரர்கள் மற்றும் பொதுமக்களுடன் ஒத்துழைப்பு தொழிலின் அனைத்து உறுப்பினர்களையும் சமமாகக் கருதுதல், இளநிலை வழக்கறிஞர்களுக்கும் ஊக்கமளித்தல், வழக்குரைஞர்களின் கண்ணியம் மற்றும் சிறப்புரிமைகளை உச்சநிலையில் வைத்திருத்தல் போன்றவை.

2. இத்தொழிலில் உள்ள ஊழல் பேர்வழிகள் அல்லது அவர்களின் நாணயமற்ற நடத்தையை வழக்குரைஞர்கள் வெளிக்கொணர வேண்டும்.

3. தலைமை நீதிபதி மார்ஷலின் கூற்றுப்படி, சட்ட அறவியலில் பின்வரும் 5 அடிப்படை நோக்கங்கள் உண்டு.

அ. சட்டத் தொழிலின் மதிப்பையும், கண்ணியத்தையும் பராமரிப்பது,



ஆ. நீதியின் உயர்தர நிலைகளை முன்னேற்றுவதில் பெஞ்சிற்கும் வழக்குரைஞர் சங்கத்திற்கும் இடையிலான நட்புறவான உணர்வை பெறுவது,

இ. தனது வாடிக்கையாளருடன், சாட்சிகளுடன், எதிர்கட்சிக்காரருடனும் வழக்குரைஞர் மதிப்புமிக்க மற்றும் நேரிய கையாளுதலை கொள்ளுதல்,

ஈ. வழக்குரைஞர் சங்கத்திலேயே சகோதரத்துவ உணர்வை ஏற்படுத்துவது,

உ. வழக்குரைஞர்கள் பொதுவாக, சமூகத்திற்கு தங்களது பொறுப்புகளை செயல்படுத்த வைப்பது,

4. சட்டத் தொழில் வியாபாரம் அல்ல. அது ஒரு நுட்பத் தொழில். சட்டத்தொழிலின் தொழில்முறை தகுதிநிலை பொது நலத்திற்காக, அரசால் உருவாக்கப்பட்டது.

வழக்குரைஞர்கள் சட்டம், வரையறுக்கப்பட்ட நடத்தை விதிகளை வழங்கினாலும் கூட பெரும்பாலானது தனிப்பட்டவர்களின் மனசாட்சியிடம் விடப்பட்டுள்ளது. தனது மனசாட்சிப்படி அவர் நடக்க வேண்டும். வழக்கறிஞர்களை வழிநடத்த முயற்சித்து விதிகளை வகுக்க ஒழுங்குமுறை அமைப்புகள் இருக்கப்படவேண்டும். சுருக்கமாக கூறினால் சட்டத் தொழிலின் நடத்தை தரம், பொதுமக்களின் கணிப்பில், தொழிலின் மதிப்பை மிகவும் உயர்த்த வேண்டும்.

## இ. வழக்குரைஞர்களின் தற்போதைய தகுதி நிலை:
**(PRESENT STATUS OF ADVOCATES)**

தொழில் நுட்ப ஒழுக்கயியல் வடிவில் நடத்தைக்கான பொது விதிகள் மற்றும் வழக்குரைஞர்கள் சட்ட வடிவில் எழுதப்பட்ட விதிகள் இருந்தாலும், சமூகத்தில் சட்டத் தொழிலுக்கு உயர்ந்த தரநிலை இல்லை.

இது ஏனென்றால், வழக்குரைஞர்களின் நடத்தையால் வழக்குரைஞர்கள் சட்டத்தின் வகையங்கள் மீறப்படும் போதெல்லாம், வழக்குரைஞர் மாமன்றம் மற்றும் சங்கங்கள் அந்த வகையங்களை திறம்பட செயலாற்றுவதில்லை.

வேறுவகையில் கூறினால். வழக்குரைஞர் மாமன்றம் மற்றும் சங்கங்கள் இந்த வகையில் பயனளிக்கும் எதையும் செய்வதில்லை.

இந்த தொழில் மற்றும் நீதித்துறையின் கண்ணியத்தை காப்பாற்றுவதில் வழக்குரைஞர் மாமன்றம் மற்றும் சங்கங்கள் செயல் முனைப்புடன் இருந்தால் வழக்குரைஞர்களின் தரநிலை பொதுமக்களின் கணிப்பில் உயரும்.

## ஈ. நடத்தைக்கேட்டிற்காக வழக்குரைஞர்களுக்கு தண்டனைகள்:

**(PUNISHMENT OF ADVOCATES FOR MISCONDUCT)**

வழக்குரைஞர்கள் சட்டம் 1961 க்கு முன்னரே நடத்தைக் கேட்டிற்காக தண்டிப்பதற்கான வகையம் இருந்தது.

1. இந்திய வழக்குரைஞர் மாமன்றங்களின் சட்டம் 1926ன் பிரிவு 10 வழக்குரைஞர்களை நன்னடத்தை கேட்டிற்காக தண்டிப்பதற்கு வகையம் இருந்தது.

2. அதோடு சட்டத் தொழில் நடத்துபவர்கள் சட்டம் 1879ம் வழக்குரைஞர்களை நடத்தைகேட்டிற்காக தண்டிப்பதற்கு பின்வரும் வகையங்கள் இருந்தது.

அ. பிரிவு 13 கூறுகிறது—தொழில்முறையற்ற நடத்தைக் குற்றம் செய்த வாதுரைஞர்கள் மற்றும் முக்தார்கள் தற்காலிக பணிநீக்கம் மற்றும் பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

ஆ. பிரிவு—14 கூறுகிறது—தொழில்முறையற்ற நடத்தைக் குற்றம் பற்றிய குற்றச்சாட்டு சார்பு நீதிமன்றம் அல்லது வருவாய் அலுவலகத்தில் கொண்டு வரப்படும் நடைமுறை.



இ. பிரிவு—15 கூறுகிறது— பிரிவு 14ன் கீழ் குற்ற விடுதலை செய்யப்படும் போது பதிவனங்களைக் கேட்கும் அதிகாரம்.

3. வழக்குரைஞர்கள் சட்டம் 1961 ன் பிரிவு 49(1) (C) வழக்குரைஞர்களால் கடைபிடிக்கப்பட வேண்டிய தொழில்முறை நடத்தையின் தரநிலைகள் மற்றும் நடத்தைமுறையை வரையறைப்படுத்துவதற்கான விதிகளை செய்வதற்கு இந்திய வழக்குரைஞர் மாமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

இருப்பினும் அத்தகைய விதிகள் இந்திய தலைமை நீதிபதியினால் ஒப்புதல் அளிக்கப்பட்டால் மட்டுமே செயல் திறன் பெற முடியும்.

சட்டத்திற்கு கீழ்படியும் புனிதமான கட்டுப்பாடு இயற்றுபவர்களுக்குள்ளதை விடஅதிகம் வேறு எவர்க்கும் இல்லை.

சட்டம் இயற்றும் நடைமுறை மற்றும் பொருள் விளக்கத்தில் ஈடுபட்டுள்ள வழக்குரைஞர் சட்டத்திற்கு கட்டுப்பட்டவராகவும் ஆவார்.

### மாதிரி வினாக்கள்: (MODEL QUESTIONS)

1. ஒரு வழக்குரைஞருக்கு அவரது சட்டத்தொழிலில் உள்ள பொது பொறுப்புகளையும் சமூகத்தில் தற்போது அவருக்குள்ள தகுதிநிலையையும் விளக்குக?
2. வழக்குரைஞர்களின் நடத்தை கேட்டிற்கான தண்டனைகள் என்ன? வழக்குரைஞர்கள் சட்டத்தின் கீழ் தொடர்புடைய வகையங்களை கூறி எடுத்துரைக்கவும்?
3. சிறு குறிப்பு வரைக:
   அ. வழக்குரைஞரின் பொது பொறுப்புகள்:
   ஆ. வழக்குரைஞரின் தற்போதைய தகுதி நிலை
   இ. தொழில்முறை நடத்தைக்கேட்டிற்கான தண்டனை.